வாக்குமூலம்

உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 48/2021

வழக்குசாட்சி LW6/PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஏம்நாத் | ஜாதி | |
| கணவர்/தந்தை | அன்பழகன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 29 |

தேதி 21.01.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் சூரப்பேட் பகுதியில் வசித்து வருகிறேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாம் கையொப்பம் என்னுடையது தான்.மேலும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாம் கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பங்கள் முறையே அ.த.சா.ஆ.2 மற்றும் 3 ஆக குறியீடுச் செய்யப்டுகிறது. ஆஜர் எதிரியை நான் பார்த்தது இல்லை. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். எதற்கு கையொப்பம் செய்தேன் என்று தெரியவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிஅளிக்கப்பட்டது**.

கடந்த 22.09.2020 காலை 11.00 மணியளவில் கதிர்வேடு மேம்பாலம் அருகில் நானும், எனது நண்பரான விமல்குமாரும் சென்றுக்கொண்டிருந்தபோது அங்கு புழல் குற்ற பிரிவு உதவி

ஆய்வாளர் போலீசார் ஒரு நபரை பிடித்து விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அப்போது புழல் குற்றப்பிரிவு காவல் உதவி ஆய்வாளர் என்னையும் எனது நண்பரான விமல்குமாரும் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாகவும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அவர் 22.09.2020 மதியம் 1.30 தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த Haier LED TV எடுத்து உதவி ஆய்வாளரிடம் கொடுத்து அதனை உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் எங்களது முன்னிலையில் கைப்பற்றியபோது சாட்சியாக இருக்க கோரி நான் சம்மதித்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பத்தினை செய்துவிட்டு போலீஸ் விசாரணையின்போதும் மேற்படி தகவலை கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.